**செய்தி வெளியீடு எண். 610** **நாள்– 21.07.2010**

ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 600 006.

<u>பத்திரிக்கை செய்தி</u>

<u>"தமிழாசிரியர்கள் தெரிவு சார்ந்த செய்தி குறிப்பு"</u>

2006–07ம் ஆண்டு முதல் 2009–10ம் கல்வி ஆண்டு வரையிலான நான்கு ஆண்டுகளில் 1359 தமிழாசிரியர்கள் (பட்டதாரி ஆசிரியர் நிலையில்) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது தவிர 2009–10ம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் (RMSA) கீழ் 200 தமிழாசிரியர் பணியிடங்களும், 2010–11 ம் ஆண்டிற்கு பள்ளிக் கல்வித் துறைக்கு 346 தமிழாசிரியர் பணியிடங்களும், ஆக மொத்தம் 546 தமிழாசிரியர் பணியிடங்களுக்கு தகுதியுடைய நபர்களை தெரிவு செய்யும் பணிகளை இவ்வாரியம் மேற்கொண்டுள்ளது. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் விடுபட்டோர் சார்ந்த விவரம் கோரப்பட்டுள்ளது, பட்டியல் பெறப்பட்டவுடன், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின்னர், 546 தமிழாசிரியர் பணியிடங்களுக்கும் பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்.

ஆசிரியர் தேர்வு வாரியம்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**